# தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் செலுத்தும் தாக்கம்

**M.N.Nishniya Musthakeema**
Department Of Languages,Faculty Of Arts ant Culture,South Eastern University Of Srilanka.

**ஆய்வுச்சுருக்கம் :** இலங்கை தமிழ்மொழியினை தாய்மொழியாகக் கொண்ட இந்து, இஸ்லாம், கிறிஷ்தவ மதத்தைச் சார்ந்த பலரும் வாழும் ஓர் நாடு. அதிலும் பிரதானமானவர்களாக இந்துக்கள் மற்றும் இஸ்லாமியரைக் குறிப்பிடலாம். இந்நாட்டிலுள்ள இவ்வினங்களுக்கிடையிலான நல்லுறவிலயே இந்நாட்டின் மேம்பாடும் முன்னேற்றமும் தங்கியுள்ளது. அந்த வகையில் இந்நாட்டில் வழும் பௌத, இந்து, இஸ்லாமியர் மத்தியில் காலங்காலமாக நல்லிணக்கமும் புரிந்துணர்வும் நிலவி வந்த போதிலும் கடந்த சில தசாப்தங்களாக நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக இந்நிலை சீர்குழைந்துள்ளது. அதன் விளைவாக இந்நாடு பல்வேரு சிக்கல்களையும் பின்னடைவயும் சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் தவறான எண்ணக்கருவையும் கொண்டுள்ளது. யுத்த நிலமைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் இனங்களுக்கிடையே சுமுகமான நிலை தோன்றியதாகத்தெரியவில்லை. கசப்புணர்வும் பகைமையும் வெறுப்பும் சந்தேகமும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. அந்தவகையில் ஒரே மொழியை தம் தாய்மொழியாகக் கொண்ட இரு இனத்தவரிடையே சமூக, இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் எவ்வகையான தாக்கத்தை செலுத்துகின்றது. என்பது பற்றி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. படிப்பறிவு மிக்க சமூகத்தவரைக்கொண்டு ஆய்வு நடாத்தப்பட்டதற்கு காரணம் முடிக்கு வரக்கூடிய சிறந்த பதில்களைப் பெறலாம் என்ற நோக்கிலும் கேட்கப்பட்ட கேள்வியின் ஆழத்தன்மையினை புரிந்து கொண்டு பதிலளிப்பர் என்ற நம்பிக்கையிலும் எதிர்காலத்தின் சமூக நிறுவுனர்கள் அவர்களே என்பதனாலுமே இப்பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக இப்பல்கலைக்கழகத்திலிருந்து எழுமாறாக பல்வேறு இனத்தைச்சேர்த 40 மாணவர்களைக் கொண்டு இவ் ஆய்வு நடாத்தப்பட்டதுடன் இவ் ஆய்வு தொகை ரீதியான தரவுகளைக்கொண்டதாக அமைந்துள்ளதுடன் வினாக்கொத்து முறையிலும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு முதலாம் தர மற்றும் இரண்டாம் தர தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்றைய சமூகத்தில் தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதற்கு தம் மதத்தின் மீதான அடிப்படை அறிவின்றிய தன்னினப்பற்றும் மாற்று மதத்தின் கொள்கைகள் மற்றும் அம் மதம் சார்ந்த விடையங்களில் தெளிவான புரிந்துணர்வின்மையுமே காரணமாகும் என இவ் ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டதோடு, மாற்று மதம், மக்கள் பற்றிய கண்ணோட்டங்களையும் அவர்களுடன் நடந்து கொள்ளவேண்டிய முறை பற்றியும் தன் மதக்கருத்துக்களினூடாக ஆராய்ந்து அறிவு பெருவதோடு மாற்று மதம் மற்றும் கொள்கைகள் பற்றிய தெளிவான புரிதல் இருப்பதும் அவசியம். என்ற கருத்துக்களும் தீர்வுகளாக முன்வைக்கப்பட்டன.

**திரவுச்சொற்கள் :** தன்னினப்பற்று, மாற்றுமத புரிந்துணர்வு, நல்லிணக்கம், இன முரண்பாடு, தமிழ் பேசும் மக்கள்

## அறிமுகம்

இலங்கையில் இன முரண்பாடு என்பது பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் விதைக்கப்பட்ட நச்சு விதைகளாகும். பிரித்தானியர்கள் இலங்கையை கைப்பற்ற முன் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் மொழி, இன, மத வேற்றுமை துறந்து சிங்கள, முஸ்லீம், தமிழ் என்ற எவ்வித பாகுபாடுமின்றி புரிந்துணர்வுடன் செயற்பட்ட பல வரலாற்றுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான ஒற்றுமை பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்கு பெரும் சவாலாக அமைந்ததனால் பிரித்தாளும் கொள்கையைக் கொண்டு இலங்கையர் மத்தியில் பிரிவினை வாதத்தை தோற்றுவித்தனர்.

இனம், மதம், பிரதேசம் என்ற அடிப்படையில் பிரிவினை வாதம் உருவாக இந்த பிரித்தாளும் கொள்கை வழிசமைத்தது. இப்பிரிவினை இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் பிரதான இனப்பிரிவினர்களுக்கிடையில் மொழி, இனச்சுதந்திரம் தொடர்பான பெரும் முரண்பாடுகளாக உருவெடுத்ததுடன் அது மூன்று தசாப்தகாலமாக தொடர்ந்த ஆயுத மோதலாகவும் வலுவடைந்தது. இத்தகைய யுத்த நிலமைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் அவ் யுத்தத்தின் வடுவும் யுத்த சாரலும் மக்கள் மத்தியில் இன்னும் மாறாத கசப்புணர்வுகளாக இருப்பது அறியமுடிகின்றது.

இப்பிண்ணனியின் மாத்தியில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பல இனங்கள் வாழும் இந் நாட்டில் அம்மக்களிடையேயும் அன்னியப்பட்ட உணர்வே மேலோங்கியிருப்பது இனரீதியாக ஏற்படும் பல்வேறு சமூக இன முரண்பாடுகளினூடாக அறிய முடிகின்றது. இம்மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் இருப்பினும் இம் முரண்பாட்டிற்கு தன்னினப்பற்றும் மாற்றுமத புரிந்துணர்வும் எவ்வகையான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதனை இவ்வாய்வினூடாக அறிய முயற்சித்துள்ளோம்.

முரண்பாடு எனும் போது ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களிடையோ தனியென்களுக்கிடையிலோ ஏற்படுகின்ற போட்டித்தன்மையைக் குறிப்பிடலாம். இது மொழி ரீதியாகவோ மதக்கருத்துக்கள் ரீதியாகவோ உரிமைகள் ரீதியாகவோ அமையலாம். இவை சிறிது சிறிதாக வளர்ந்து பின்பு பாரிய பிரச்சனைக்கு வழிவகுக்கும் வன்மமாக மாறுகின்றது. மதங்களுக்கிடையே கொள்கை ரீதியாக ஏற்படும் முரண்பாடுகள் மத முரண்பாடு எனவும் மொழியின் அடிப்படையில் தோன்றுவது மொழி முரண்பாடு எனவும் படும். அந்த வகையில் ஒரே மொழியை பேசக்கூடிய இரு இனங்களுக்கிடையிலான இவ்வின முரண்பாட்டில் மொழி அம்மக்களை இணைக்கும்பாலமாக இருப்பது தெள்ளத்தெளிவு. இவ்வகையில் நோக்குகையில் இன முரண்பாடுகளின் பிரதான காரணங்களில் ஒன்றாக மதம் இருப்பது புலப்படுகின்றது.

பல அரசியல் வேட்கை கொண்டவர்களால் அரசியல் சுயலாபத்திற்காக தூண்டிவிடப்படும் முரண்பாடுகள் ஒருபக்கமிருக்க மதரீதியாக மக்கள் மத்தியில் வேற்று மனநிலை தோன்றியமைக்கு காரணம் மாற்று மத புரிந்துணர்வு இன்மையேயாகும். மனிதனென்ற வகையில் தான் நம்பிக்கை கொண்ட இறைவனை வழிபட ஒரு மார்க்கத்தையும் அதற்கான சில கட்டுக்கோப்புக்கள், வழிமுறைகளையும் வகுத்துக்கொள்வான். எந்த மதமும் ஏனைய உயிர்களை இழிவுபடுத்தவோ துன்புறுத்தவோ சொல்வதில்லை. எல்லா மதங்களும் மனுதர்மம், நீதியையே போதிக்கின்றன. அவ்வாறு இருக்க ஏன் இன ரீதியான முரண்பாடுகள் தோன்றுகின்றன. மக்கள் மத்தியில் தம் சுயலாபத்துக்காக நச்சுக்கருத்துக்களை விதைக்கும் ஒரு சிலரால் முரண்பாடுகள் தோற்றுவிக்கப் படுவதுடன் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வும் புரக்கணிக்கப்படுகின்றது.

இவ்வாறான இம்மதங்கள் பற்றிய காந்தியடிகளின் கண்ணோட்டம் இவ்வாறு இருந்தது. 'ஒரு இடத்தில் கூடும்பல சாலைகள் போலவே மதங்கள். நாம் ஒரே முடிவை நோக்கி பயணிக்கிறோம் எனில் எந்த

சாலையில் செல்கிறேம் என்பது முக்கியமல்ல. இதற்காக சண்டையிட என்ன அவசியம்' என்கிறார். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக மதங்கள் பிரதான பாதையமைத்துக் கொடுக்கின்றன. சமூகத்தின் மீட்சிக்காய் பாவங்களை தடுப்பதற்காய் போராடும் மிகப்பெரிய உளவியல் ஆயுதம் மதம். சாந்தி, சமாதானம், அன்பு, தூய்மை, உண்மை போன்றவற்றை மனிதனுள் விதைத்து உளரீதியாக மனிதனை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்கினை மதங்கள் கொண்டுள்ளன.

இன முரண்பாட்டின் ஆழத்தை ஆராய்கையில் மத நல்லிணக்கமின்மையும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. நல்லிணக்கம் எனும் போது பல்வேறு பிரிவினரும்தமக்கிடையே நிலவும் வேறுபாடுகளைக் கடந்து கடைபிடிக்க வேண்டிய ஒற்றுமைகளைக் குறிக்கும். எனவே மதங்கள் தம்மகத்தே தூய நெறிகளைக் கொண்டுள்ள போதிலும் அதனைப் பின்பற்றுவோர் தம் மதம் அல்லது இனம் பற்றிய அறிவு பூர்வமான முழுப்புரிதல் அற்ற தன்னினப்பற்றும் மாற்று மதம் அவற்றின் கொள்கைகள் மற்றும் அற்றின் செயற்பாடுகள் பற்றிய ஆழ்ந்த புரிதலின்மையும் சமூகத்தில் எதிர்மறைத்தாக்கமான விளைவுகளை ஏற்படுத்துவதில் முன்னிற்கின்றன. இவ்வாய்வினூடாக தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதின் தன்மை பற்றி மாத்திரமே ஆராயப்பட்டுள்ளது. இனி வரும் ஆய்வாளர்கள் இலங்கைவாழ் அனைத்து மக்களையும் மையப்படுத்திய விதத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம். மேலும் புத்தி ஜீவிகளான பல்கலைக்கழக மணவர்களை மாத்திரமே மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வை ஏனைய பாமர மக்களையும் கொண்டு எதிர்வரும் காலங்களில் ஆய்வு மேற்கொள்ளலாம்.

**ஆய்வுப்பிரச்சனை**

மூன்று தசாப்த காலமாக நடந்த யுத்த நிலமைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் இன்னும் இலங்கை வாழ் மக்களுக்கிடையே குறிப்பாக ஒரே மொழியைப் பேசும் இனங்களுக்கிடையே இன முரண்பாடுகள் தோன்றிய வண்ணமே உள்ளன. பலர் தம் சுயலாபத்திற்காக மக்களிடையே குழப்ப நிலையை தோற்றிவிப்பினும் அதற்குள் இலகுவில் விழுந்துவிடும் வண்ணம் புரிதலற்ற தன்மை மக்களிடையே நிலவுவது ஆய்வுப்பிரச்சனையாகும்

**ஆய்வு நோக்கம்**

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களிடையே இன மத ரீதிய முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் எவ்வகைான தாக்கத்தை செலுத்துகின்றது

என்பது ஆராய்ந்து அறிவதோடு மாற்று மதப்புரிலற்ற தன்மைக்கான காரணங்களையும் இன முரண்பாட்டிற்கான மதரீதியான காரணங்களையும் ஆராய்ந்து அறிவதோடு அதற்கான தீர்வுகளையும் ஆய்வு ரீதியாக வழங்குவதே நோக்கமாகும்.

**ஆய்வுமுறைமை**


தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் செலுத்தும் தாக்கம் பற்றிய இவ் ஆய்வு தொகை ரீதியான தகவல்களை உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது. ஏனெனில் தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடு தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மதப் புரிந்துணர்வும் எவ்வகையான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதை கண்டரிவதே நோக்கமாகக் கொண்டதால் வினாக்கொத்து முறையிலயே தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுவதற்காக முதல் நிலைத்தரவுகளும் துணை நிலைத்தரவுகளும் பண்புநிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத் தரவுகளை

அடிப்படையாகக்கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வுக்காக தகவல் சேகரிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தானது பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதலாம் பகுதி விடையளிப்பவரின் விபரங்கள் உள்ளடக்கியதாகவும் இரண்டாம் பகுதி தன்னினப்பற்று மற்றும் மாற்று மதப் புிந்துணர்வு தொடர்பான பத்து கேள்விகளை உள்ளடக்கியதாகவும் காணப்படகின்றது. இவ்வாய்வை மேற்கொள்வதற்காக ஆய்வாளரினால் சுயமாக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தே வழங்கப்பட்டது.

இவ்வாய்விற்காக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மாணவர்களில் எழுமாறாக நாற்பது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். பல்கலைக்கழக மானவர்களை இவ்வாய்விற்கு தெரிவு செய்வதற்கான காரணம் படிப்பறிவு உள்ளவர்களைக்கொண்டு ஆய்வு மேற்கொண்டால் உறுதியான முடிவுக்கு வரக்கூடிய பதில்களைப் பெறலாம் என்ற காரணத்திற்காகவும் இவ்வினாக்கொத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை சரியாகப் புரிந்து ஆழமாக உள்வாங்கி விடையளிப்பர் நம்பிக்கையும் எதிர் கால சமூக நிறுவுனர்களாகிய இம் மாணவர்களின் கருத்தைப் பெறும் நோக்கிலுமே இவர்களைக் கொண்டு இவ்வாய்வு மேற்கெள்ளப்பட்டுள்ளது.

வினாக்கொத்தின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளை micro soft xl software இனை பயன்படுத்தி தரப்படுத்தி நிரல் வரைபுகளாக காட்டப்பட்டுள்ளதுடன் வரைபுகளின் துணையுடன் அவற்றின் முடிவுகளும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.





**உரு 1**

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**


தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் செலுத்தும் தாக்கம் எத்தகையது என்பது பற்றிய கருத்துக்கணிப்பு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்பேசும் பல்வேறு இன மாணவர்களிடையே நடாத்தப்பட்டதன் பெறுபேறுகள் கீழ்வரும் நிரல் வரைபுகளில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவனை 1.** *நான் நாளாந்த அல்லது வாராந்தம் எனது மத அனுஸ்டானங்களில் பெரும்பாலும் கலந்த கொள்வேன்*





இவ்வரைபினூடாக இவ்வாய்விற்காக பதிலளித்தவர்கள் தம் மத விடயங்களில் எத்தகைய பேணுதலில் உள்ளனர் என்பது பற்றியும் அவர்களின் தன்னினப்பற்று பற்றியும் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. நாளாந்த அல்லது வாராந்த மத அனுஸ்டானங்களில் பெறும் பாலும் 95சதவீதமானவர்கள் ஈடுபடுவதாகவும் 5சதவீதமானவர்கள் தன் மார்க்க விடயங்களில் கரிசனை அற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

**அட்டவனை 2.** *தனது மத விடயங்களில் பற்றோடு இருப்பது பிர மத சக நண்பர்களோடு நல்லிணக்கமாக இருப்பதில் பாதிப்பு செலுத்துகிறது*





தனது மத விடயங்களில் பற்றோடு இருப்பது பிர மத சக நண்பர்களோடு நல்லிணக்கமாக இருப்பதில் பாதிப்பு செலுத்துகிறது. என்ற கேள்விக்கு பெரும்பான்மையினரின் அதாவது 75சதவீதமானவரின் பதில்கள் உடன்படவில்லை அல்லது முற்றிலும் உடன் படவில்லை என்பதாகவே அமைந்தது. வெறும் 30சதவீதமானவர்களே அதில் உடன்பட்டனர்.

**அட்டவணை 3.** *தனது மதத்தில் அனுமதிக்கப்பட்ட விடயம் மற்றைய மதங்களில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் அவர் அதை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது உரிமைப்பறிப்பாகும்*




தனது மதத்தில் அனுமதிக்கப்பட்ட விடயம் மற்ற மதங்களில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் அவர் அதை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது உரிமைப் பறிப்பாகும் என்பதனை 45சதவீதமானவர்கள் முற்றிலும் உடன் பட்டவர்களாகவும் 25சதவீதமானவர்கள் உடன்பட்டவர்களாகவும் இருப்பதோடு உடன் படாதோர் 30சதவீதமானவர்கள் காணப்படுகின்றனர்.


**அட்டவனை 4**. *இன மத முரண்பாடுகளின் முதன்மைக் காரணிகளில் பெரும்பகுதி அரசியல் இலாபம்*




*ஈட்டுவதற்காகும்*

இன மத முரண்பாடுகளின் முதன்மைக்காரணிகளில் பெரும்பகுதி அரசியல் இலாபம் ஈட்டுவதற்காகும் என்ற கருத்துக்கணிப்பில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட அனைத்து இன மாணவர்களினதும் ஏகபோக பதிலாக 100 க்கு 100சதவீதமுமே உடன் படுகிறேன், முற்றிலும் உடன்படுகிறேன் என்ற பதிலே பெறுபேறாகக்கிடைத்தது.


**அட்டவனை 5**. *தனது மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத விடயம் சகோதர மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அம்மதத்தைச் சேர்ந்தவர் அதை விட்டுக்கொடுக்க வோண்டும் என*




*எதிர்பார்ப்பது அல்லது அதைப்பறிப்பது இன முறிவை ஏற்படுத்தும்*

தனது மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத விடயம் சகோதர மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அம்மதத்தைச் சேர்ந்தவர் அதை விட்டுக்கொடுக்க வோண்டும் என எதிர்பார்ப்பது அல்லது அதைப்பறிப்பது இன முறிவை ஏற்படுத்தும் என்பதனை 50 சதவீதமானவர்கள் முற்றிலும் உடன் பட்டவர்களாகவும் 45சதவீதமானவர்கள் உடன்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்


**அட்டவனை 6.** *இன மத முரண்பாடுகளில் முதன்மைக்காரணிகளுல் ஒன்று சகிப்புத்தன்மை*




*இன்மையாகும்*

மதங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மையின்மையானது இனமுரண்பாடுகள் தோன்றுவதற்கான இன்னுமொரு காரணம் என்பதனை இவ்வரைபில் காட்டப்பட்டுள்ள பதில்களின் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம். 95சதவீதமானவர்களின ் பதில் உடன்படுவதாகவே அமைந்துள்ளதுடன் 5சதவீதமானவர்களே எதுவும் கூறமுடியாது எனவும் வாக்களித்துள்ளனர்.


**அட்டவனை 7.** *இன மத முரண்பாடுகளின் முதன்மைக் காரணி தனது இன மதம் மீதான அறிவற்ற பற்றாகும்*



தனது இனம் மதம் மீதான *அறிவற்ற* பற்று இன முரண்பாடு தோன்றுவதற்கான இன்னுமொறு காரணம் என 75சதவீதமானவர்களின் கருத்தாக உள்ளதோடு 25சதவீதமானவர்களே இதில் உடன்படவில்லை.


மேலும் கீழ்வரும் வரைபினூடாக கேட்கப்பட்ட கேள்வியானது நான் ஒரு தொழில் நிறுவனத்தில் பொறுப்பதிகாரி இருக்கும் பட்சத்தில் அந்நிறுவனத்தில் உள்ள மாற்று மத சகோதரர்கள் தம் மத உரிமைகளை அடைந்து கொள்ள வழி செய்வது எனது கடமையும் பொறுப்புமாகும். என்ற கருத்தில் 75 சதவீதமானவர்கள் முற்றிலும் உடன்பற்றதோடு 25 சதவீதமானவர்கள் உடன்பட்டனர். அதாவது 100 சதவீதமானவர்களும் அது தன் கடமையும் பொருப்புமாகும் என்பதில் ஏகபேகமாக உடன்பட்டனர்.

**அட்டவனை 8**. *தொழில் நிறுவனமொன்றில் முதன்மை பொறுப்பதிகாரியாக நான் கடமையாற்றினால் அந்நிறுவனத்திலுள்ள மாற்று மத சகோதரர்கள் அவர்களது மத உரிமையை அடைந்து கொள்ளச்*




*செய்வது எனது கடமையும் பொறுப்புமாகும்*

**அட்டவனை 9**. *இன மத முரண்பாடுகளில் முதன்மைக்காரயணிகளுள் ஒன்று மாற்று மத புரிந்துணர்வு இன்மையாகும்*




இன

மத

முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணங்களில் மாற்று மதப்புரிந்துணர்வு இன்மையும் ஒன்றாகும் என்ற கருத்தில் 80 சதவீதமானோர் உடன்பட்டோராகவும் 15 சதவீதமானவர்கள் எதுவும் கூறமுடியாதவர்களாகவும் 5சதவீதமானவர்கள் முற்றிலும் உடன்படாதவர்களாகவுமே காணப்படுகின்றனர். இருப்பினும் பெரும்பான்மையானவர்கள் உடன்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

**முடிவுரை**

தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மதப்புரிந்துணர்வும் எவ்வகையான தாக்கத்தை செலுத்துகின்றது. என்ற கோணத்தில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பல்வேறு மதத்தைச்சார்ந்த மாணவர்களைக் கொண்டு ஆராய்ந்ததில் கல்வியறிவு, பல்வேறு சமூகத்தவருடனான தொடர்பு அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் அவர் அளித்த பதில்களின் மூலமாக இன முரண்பாட்டிற்கான காரணங்களை அறிந்து கொண்டோம்.

1.தன் மதம் சார்ந்த முழுமையான அறிவுபூர்வமான விளக்கமற்ற தன்னினப்பற்று. அதாவது எந்த மதமும் இன்னுமொரு மதத்தையோ ஏனைய உயிர்களையோ அவமதிக்கவோ துன்புறுத்தவோ வற்புறுத்தவோ சொல்வதில்லை. இதில் விளக்கமற்ற பலர் தம் இனத்தையோ மதத்தையோ காப்பதாக நினைத்து ஏனைய மதங்களை இழிவதுடன் அற்றின் மேல் காழ்ப்புணர்வுடன் செயற்படுவது இன முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது.

2.மாற்று மதம் அவற்றின் அனுஷ்டானங்கள் தொடர்பான புரிந்துணர்வும் அறிவும் இன்மை.உதாரணமாக: முஸ்லீம்கள் உணவின் தன்மை,சுத்தம் போன்றவற்றின் உறுதிப்படுத்தலுக்காக வழங்கப்படுவதே ஹலால் சான்றிதழாகும். மாற்று மத சகோதரர்கள் பலர் இதனை மாமிச உணவு, மாடறுப்பு அனுமதியாகவும் கொள்கின்றனர். இவ்வாறான புரிதலற்ற தன்மை முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

3.அரசியல் இலாபம் ஈட்டுவதற்காக பல அரசியல் வாதிகள் இன மத ரீதியான உட்பூசல்களை உண்டாக்குவதன் மூலம் தாம் நிலை நிற்க முனைதல்

4.சமூக வலைத்தளங்களினூடாக அல்லது வாய்வழியே பகிரப்படும் முரண்பாட்டிற்குறிய வதந்திகளை எவ்வித ஆராய்வுமின்றி நம்புவதுடன் உணர்வுகளை வெளிக்காட்டல். இதுவரை ஏற்பட்ட பல இன குழப்பங்ளுக்கு வதந்திகளே காரணமாயின.

5.ஒரே நாட்டில் வாழும் பல இன மக்களுக்கிடையே மத ரீதியான சகிப்புத்தன்மை இன்மை.

இவ்வாறான சமூகக் கோளாருகளினாலே ஒரே மொழி பேசக்கூடிய நம் மத்தியிலும் இன முறுகல் நிலை தோன்றுவதற்கும் முரண்பாடுகள் ஏற்படுவதற்கும் வழிகோழுகிறது. இவ்வாறான முரண்பாடுகளை தோற்றுவிக்கின்ற காரணிகளை தீர்ப்பதற்கான சில வழிமுறைகளும் எம்மால் முன்வைக்கப்பட்டன. அவை,

1.ஒவ்வொரு மதத்தைச்சார்ந்தவரும் தம் தம் மதத்தை சரியான முறையில் விளக்கமாக கற்க வேண்டும்.

2.பல இனங்கள் கலந்து வாழும் இலங்கையில் பிற சமயக்கல்விகளையும் சமய ஒப்பீட்டாய்வு நோக்கில் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

3.கருத்துக்களை பரிமாறும் விடயத்திலும் வலைத்தலங்களில் சமூகம் சார்ந்த விடயங்களை எழுதும் விடயத்திலும் சமூக பொறுப்புக்களுடன் நடந்து கூடிய சமூத்தை உருவாக்குதல் வேண்டும்.

4.அனைவரும் இலங்கையர் என்ற நாட்டின் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

5.ஊடகம் ஒரு இனத்தின் பக்கம் சாராமல் சமூகப் பொறுப்புடன் நடுநிலையாக நடந்து கொள்வதோடு, நலவு, கெடுதிகளை மதம், பெயர் சாராமல் இலங்கையர் என்ற நோக்கில் ஒலி, ஒளிபரப்ப வேண்டும்.

6.அரசியல் இலாபத்திற்காக தம்மை இனப்பற்றாளராக இனங்காட்டிக்கொள்பவர்களை தம் இனத்துக்கு மத்தியில் புத்திஜீவிகள் இனங்காணச்செய்ய வேண்டும்.

இவ்வாறான தீர்வுகள் தமிழ் மொழியைப்பேசும் பல இனமக்கள் வாழும் நம் மத்தியில் இன முரண்பாடுகளை களைவதோடு சிறந்த சமூகப்பொறுப்புடன் கூடிய குடிமகனையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. எமது

இவ்வாய்வினூடாக படித்த இளைய சமூகத்தவரிடையே சிறந்த புரிந்துணர்வும் சமூகப்பொறுப்பும் இருப்பது இனங்காணக்கூடியதாக உள்ளதுடன் அவை அற்ப அரசியல் மற்றும் சுய இலாபங்களுக்காக அழிக்கப்படாது இருக்க வேண்டும்.

**உசாத்துணை**


உதயன்,விஜயன்.(1987).இந்து சமுத்திர பிராந்தியமும் இலங்கை இனப்பிரச்சனையும்:யாழ்ப்பாணம்.

யூட்,பா.(2011).இலங்கை இன முரண்பாட்டின் தோற்றுவாய். Retrieved august 12. 2011.(online) Available: http://tgasociety.blogspot.com/2011/08/blog-post_3831.html?m=1

ஹனீபா,ஏ.(2015).மதங்களுக்கிடையிலான நல்லிணக்கம். Retrieved November 04. 2015.(online) Available: http://puttalamonline.com/2015-1104/puttalam-social/96352/

அகார் முஹம்மத்.(2012).இன நல்லிணக்கமும் சக வாழ்வும். Retrieved february 14. 2012.(online) Available: www.sheikhagar.org/component/content/article/299-unity2

மதம்,(online), Available: http://ta.m.wikiquote.org/wiki/மதம்